

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (18.6.2025) முகாம் அலுவலகத்தில், கழக மகளிர் அணி மாநில சமூக வலைதள பொறுப்பாளர் டாக்டர் யாழினி தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (18.6.2025) முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு அரசின் ஏழாவது மாநில நிதி ஆணையத்தின் தலைவர் கே.அலாவுதீன் சந்தித்து. தனது மகன் திருமண விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்.

### மாம்பழக் கூழுக்கான ஜி.எஸ்.டி. வரியைக் குறைக்க தி.மு.க. அரசை பழனிசாமி வலியுறுத்துவது விந்தையிலும் விந்தை!

# மா சாகுபடி விவசாயிகள் கோரிக்கைக்குத் தீர்வு கண்ட பிறகு ஆர்ப்பாட்டம் அறிவிப்பதா?

## அமைச்சர் அர.சக்கரபாணி அறிக்கை!

சென்னை, ஜூன். 20-

மாம்பழக் கூழுக்கான ஜி.எஸ்.டி. வரியை குறைக்க தி.மு.க. அரசை அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி வலியுறுத்துவது விந்தை என்றும், மா சாகுபடி விவசாயிகள் கோரிக்கைக்குத் தீர்வு கண்ட பிறகு ஆர்ப்பாட்டம் அறிவிப்பதா என்றும் குறிப்பிட்டு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

'மா' சாகுபடி விவசாயி களுக்காக திமுக அரசைக் கண்டித்து உண்ணாவிரதப் போராட்டத்தை அறிவித்திருக்கிறது அதிமுக. மா விவசாயிகள் மட்டுமல்ல அனைத்துத் தரப்பு விவசாயிகளின் நலனைக் காப்பாற்றி வருவது திராவிட மாடல் அரசு! பழனிசாமி செய்தித் தாள்களைக் கூடப் படிக்காமல் அரைவேக்காட்டுத் தனமாக அறிக்கை விடுகிறார் என தமிழ்நாடு முதலமைச்சர் கூறியதை மீண்டும் மீண்டும் நிரூபித்து வருகிறார் பழனிசாமி. உண்ணாவிரதப் போராட்டம் என்ற பெயரில் அரசின் மீது வீணான அவதூற்றைப் பரப்பியிருக்கிறார்.

ஒரு பிரச்சினை எழுந்தால் அதனை உடனடியாகக் கவனித்துத் தீர்வு காணும் நடவடிக்கையை திமுக அரசு மேற்கொண்டு வருகிறது. அப்படிதான் மா சாகுபடி விவசாயிகளின் கோரிக்கை விவகாரத்திலும் தலையிட்டு அரசு நடவடிக்கை எடுத்துவிட்டது. அதன் பிறகும் தன் இருப்பை காட்டிக் கொள்ளப் போராட்டம் அறிவித்து அரசியல் ஆதாயம் தேட முயல்கிறார் எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி.



கிருஷ்ணகிரி , திண்டுக்கல், தருமபுரி, திருவள்ளூர், தேனி, திருப்பத்தூர், சேலம், வேலூர் மற்றும் மதுரை உள்ளிட்ட மாவட்டங்களில் சுமார் 1.46 இலட்சம் எக்டரில் மா சாகுபடி மேற்கொள்ளப்பட்டு 9.5 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. வழக்கமாக 5 முதல் 6 மெட்ரிக் டன் அளவிற்கு உற்பத்தியாகும் மா உற்பத்தி இந்த ஆண்டு பருவ நிலையின் சாதகத்தால் 8 மெட்ரிக் டன்னிற்கும் மேலாக அதிகரித்துள்ளது.

மாம்பழக் கூழ் உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் மா சாகுபடி விவசாயிகள் இடையிலான முரண்பாடுதான் பிரச்சினைக்குக் காரணம். இது தொடர்பாகக் கடந்த 16ம் தேதி வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் தலைமையில், தோட்டக்கலைத் துறை இயக்குநர், கிருஷ்ணகிரி, திண்டுக்கல், தருமபுரி, திருவள் ளூர், தேனி, திருப்பத்தூர், சேலம், வேலூர், மதுரை ஆகிய மாவட்ட தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் மற்றும் மாம்பழக்கூழ் பதப்படுத்தும் நிறுவனங்கள் இடையே ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

மாம்பழம் பதப்படுத்தும் தொழிற்சாலைகளில் கடந்த ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட மாம்பழக்கூழ் கையிருப்பு அதிகம் உள்ளதால், மாம்பழங்களைக் கொள்முதல் செய்யும் தேவை குறைந்துள்ளதாகப் பதப்படுத்தும் நிறுவனங்கள் சார்பில் கூட்டத்தில் தெரிவிக்கப் பட்டது. தேவை குறைந்துள்ளதாலும் மா உற்பத்தி அதிகமானதாலும் விவசாயிகளிடமிருந்து உரிய விலைக்கு மா கொள்முதல் செய்ய இயலாத நிலை உள்ளது என்றும் சொன்னார்கள். ஜூன் 20ம் தேதிக்கு மேல் விவசாயிகளிடமிருந்து மாம்பழங்களைக் கொள்முதல் செய்து கொள்வதாக பதப்படுத்தும் நிறுவனங்கள் அரசு அதிகாரிகளிடம் உறுதி அளித்துள்ளன.

மா சாகுபடி விவசாயிகளின் நலன் கருதி மாம்பழக்கூழ் தயாரிக்கும் பணிகளை உடனடியாகத் தொடங்கவும், மாம்பழக்கூழ் தயாரிக்க பெங்களூராரகத்தினை விவசாயிகளிடம் இருந்து நியாயமான விலையில் கொள்முதல் செய்யவும் வேளாண்மைத் துறை அதிகாரிகள் அறிவுறுத்தினார்கள். வேளாண்மை உற்பத்தி ஆணையரும் அரசு செயலாளருமான தட்சிணாமூர்த்தி மாம்பழக் கூழ் நிறுவனங்களுக்கு உத்தரவிட்ட செய்தி நேற்றும் இன்றும் ஊடகங்களில் வெளியாகியுள்ளது. இத்தனைக்கும் பிறகு போராட்டத்தை அதிமுக நடத்துகிறது என்றால் அதற்கு அரசியல் காரணம் தவிர வேறு என்ன இருக்க முடியும்?

பிரச்சினைக்கு அரசு தீர்வு காணாவிட்டால் அதை எதிர்க் கட்சித் தலைவர் சுட்டிக் காட்டலாம். ஆனால், தீர்வு கண்ட பிறகும் நடவடிக்கை எடுத்துவிட்ட பிறகும் உண்ணா விரதப் போராட்டத்தை அறிவிப்பது எதற்காக? மாம்பழங்கள் கொள்முதல் செய்யப்படும் எனச் சொல்லப்பட்ட 20ம் தேதியில் உண்ணாவிரதப் போராட்டத்தை பழனிசாமி அறிவித்தது அரசியல் ஆதாயம் பெறத்தானே!

'இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை' என பழனிசாமி அறிக்கையில் பச்சைப் பொய் சொல்வதை மக்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். 'மாம்பழக் கூழுக்கான ஜி.எஸ்.டி. வரியை 12 விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காடாகக் குறைக்க வேண்டும்' என திமுக அரசை பழனிசாமி வலியுறுத்துவது எல்லாம் விந்தையிலும் விந்தை. அதற்கான அதிகாரத்தை வைத்திருக்கும் ஒன்றிய பாஜகவைப் பற்றி ஒரு வார்த்தை கூடக் குறிப்பிடாமல் அறிக்கை வெளியிடுவதன் மூலம் விவசாயிகளை வஞ்சிக்கும் மோடி அரசைக் காப்பாற்றி தனது அடிமை விசுவாசத்தைக் காட்டியிருக்கிறார். ஒன்றிய அரசு என்றால் கொஞ்சல், மாநில அரசு என்றால் எரிச்சல் என இரட்டை வேடம் போடும் கபட வேடதாரிதான் பழனிசாமி!

'மா' விவசாயிகளின் நலனை மட்டுமல்ல தமிழ்நாட்டில் உள்ள அனைத்துத் தரப்பு விவசாயிகளின் நலனைக் காப்பாற்றி வருவது திராவிட மாடல் அரசுதான். வேளாண் துறைக்குத் தனிப் நிதிநிலையை அறிவித்து உழவர் குடி மக்களின் வாழ்வை உயர்த்தப் பாடுபட்டு வரும் திராவிட மாடல் அரசை இந்த அபத்தப் பொய்களால் எல்லாம் அசைத்துக் கூடப் பார்க்க முடியாது.

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய-நகர-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

திருநெல்வேலி கிழக்கு மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 28.06.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | திருநெல்வேலி கிழக்கு | எஸ்.ஆர்.மஹால், நாங்குநேரி. |

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம்–9–இல் திருநெல்வேலி கிழக்கு மாவட்டத்திலுள்ள நாங்குநேரி மற்றும் அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதியில் நடைபெறும் சமூக வலைத்தளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 28.06.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | நாங்குநேரி | எஸ்.ஆர்.மஹால், நாங்குநேரி. |
| 29.06.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | அம்பாசமுத்திரம் | எஸ்.எல்.எம்.திருமண மண்டபம், வீரவநல்லூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 18-06-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


### முதலமைச்சரின் நோக்கத்தை நிறைவேற்ற

# தமிழ்நாடு ஆதி திராவிடர் (ம) பழங்குடி மாநில ஆணையத்தைப் பயன்படுத்துங்கள்!



தமிழ்நாட்டில் பிறப்பால், வாழிடத்தால், உணவுப் பழக்கத்தால் பிற சமூகக் காரணிகளால் SC - ST மக்கள்மீது, உடல் ரீதியாகவோ, மன ரீதியாகவோ, பொருளாதார ரீதியாகவோ யார் தாக்குதல் நடத்தினாலும், சம்பந்தப்பட்டவர்கள்மீது சட்ட ரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், வன்கொடுமைக்குள்ளானவர்களுக்கு உரிய இழப்பீட்டை விரைவாகப் பெற்றுத்தருவதற்காகவும் அமைக்கப்பட்டதுதான் இந்த தமிழ்நாடு ஆதி திராவிடர் (ம) பழங்குடியினர் ஆணையம். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் மாநில அளவில் ஆணையம் அமைக்கப்பட்டிருக்கிறது. தேசிய அளவில் SC ST ஆணையம் இருந்தாலும்கூட, பாதிக்கப்பட்டவர்களுக்குச் சட்டப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும், விரைவாக நிவாரணம் வழங்க வேண்டும், வன்கொடுமைகளுக்கு ஆளான மக்களின் சட்டக் குரலாக ஒலிக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு தமிழ்நாடு முதலமைச்சர் இந்த ஆணையத்தை 2021இல் அமைத்தார்.

ஆணையத்தின் தலைவராக உயர்நீதிமன்ற, ஓய்வுபெற்ற நீதிபதியும், உறுப்பினர் செயலராக ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவரும், துணைத் தலைவர் மற்றும் ஐந்து உறுப்பினர்களும் கொண்ட தன்னாட்சி அமைப்பு. ஆணையம் தன்னிடம் வரும் புகார் மனுக்கள்மீது மூன்று மாதங்களுக்குள் தீர்வை எட்ட முயல்கிறது.

2025 மார்ச் மாதத்தில் மட்டும் வேலூர், சேலம், திருநெல்வேலி, தஞ்சாவூர், மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில், மாவட்ட ஆட்சித் தலைவரின் முன்னிலையில், மாவட்டத்தின் அனைத்துத் துறையைச் சார்ந்த உயர் அதிகாரிகளின் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. ஆய்வுக்கூட்டத்தில் பொதுமக்கள் தங்களுடைய குறைகளை, தேவைகளைக் கூற ஏற்பாடு செய்யப்பட்டது. பெறப்படும் மனுக்கள்மீது உடனே தீர்வு வழங்கப்படுகிறது. உடனே தீர்வு எட்ட முடியாத பிரச்சினைகளுக்கு 15 நாள்களுக்குள் தீர்வு காணப்பட்டு, அதற்கான அறிக்கை ஆணையத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும். ஐந்து மாவட்டங்களிலும் ஆய்வுக் கூட்டத்தை ஆணையம் நடத்தியபோது, தாட்கோ மூலம் கடன் பெறப்பட்ட பயனாளிகள் 225 பேர், சாதிய வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்கள் 191 பேர். தீர்வு உதவித்தொகையாக மூன்று கோடியே பதினாறு லட்சத்து பன்னிரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய் (ரூ.3,16,12,500) வழங்கப்பட்டது. விலையில்லா வீட்டு மனைப் பட்டா 1,475 பேருக்கும், 206 தையல் இயந்திரங்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு நலவாரிய உறுப்பினர் அட்டை 138 பேருக்கும் பல்வேறு சமூக நலத்திட்டங்கள் வழங்கப்பட்டன. இது ஆணையத்தின் முயற்சியால் நடந்திருக்கிறது. அரசின் நலத்திட்டங்கள் SC ST மக்களுக்குச் சென்றுசேர்கிறதா என்பதைக் கண்காணிப்பதும், சாதிய வன்கொடுமைகள் நடைபெறும் இடங்களில் காவல்துறை எவ்வாறு செயல்படுகிறது, வழக்குகள் முறையாக நடக்கின்றனவா, சாதிக் கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தீர்வு உதவித்தொகை சரியாக வழங்கப்படுகிறதா என்பதை அவதானிப்பதும், காவல்துறையைச் சரியாகச் செயல்பட வைப்பதும் ஆணையத்தின் பணிகளில் முக்கியமானவை.

எழுத்தாளர் **இமையம்**



இந்த ஆணையம் தமிழ்நாட்டில் வாழ்கிற SC ST மக்களுக்கான சட்ட சமூகப் பாதுகாப்பு அமைப்பு. அது எந்த விதத்திலும் பிற சமூகத்திற்கு எதிரானது அல்ல. சமூகக் குற்றவாளிகள் உருவாகாமல் தடுப்பதும், சமூகக் குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுத்தருவதும்தான் ஆணையத்தின் நோக்கம்.

ஆணையம் என்று ஒன்று இருக்கிறது என்பதும், அது SC ST மக்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதும் அனைத்து மக்களுக்கும் தெரிந்திருக்கிறது என்று சொல்ல முடியாது. விவரமறிந்தவர்கள், சங்கத்தினர், அமைப்பினர் மட்டுமே ஆணையத்தை அணுகக்கூடிய நிலைதான் இன்றும் இருக்கிறது. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து SC ST மக்களும் ஆணையத்தை அணுகும் நிலை ஏற்பட வேண்டும். அப்படி அணுகும் போதுதான் ஆணையம் மேலும் வலுப்பெறும். ஆணையத்தை அமைத்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நோக்கம் நிறைவேறும்.

ஆணையத்திற்குப் புகார் மனுக்களை நேரில் வழங்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. தபால் மூலமாகவும் இமெயில் வழியாகவும் அனுப்பலாம். ஆணையத்திற்கு வரும் மனுக்களை வெறும் புகார், குற்றச்சாட்டு, தேவை சார்ந்தது என்று மட்டுமே அணுகாமல், மனுவில் ஒரு மனிதருடைய, ஒரு குடும்பத்தினுடைய, ஒரு ஊரினுடைய அத்தியாவசியத் தேவை, வலி, ஏக்கம், பரிதவிப்பு, அவலம், உயிர் வாழ்தலுக்கான பாதுகாப்பு, கண்ணீர் அனைத்தும் நிறைந்திருப்பதாகவே பார்க்கிறது. யாரையும் நிற்க வைக்கக் கூடாது, யாரையும் காக்க வைக்கக் கூடாது, மனம் நோகும்படி யாரையும் பேசக் கூடாது என்பது ஆணையத்தின் அடிப்படை நெறிகளாக இருக்கின்றன.

5300 ஆண்டுகளுக்கு முன்னதாக இரும்பு தொழில்நுட்பத்தை பயன்படுத்திய சமூகம், 3200 ஆண்டுகளுக்கு முன்பு விவசாயத்தை பயன்படுத்திய சமூகம், கீழடியில் நகர நாகரீகத்தோடு வாழ்ந்த சமூகம், தொல்காப்பிய இலக்கண நூல் கண்ட சமூகம், சங்க காலத்தில் பெண்களும் கல்வி கற்றறிந்த சமூகமாக இருந்த தமிழ் இனம், பக்தி இலக்கிய காலத்தில் மொழியும் இலக்கியமும் கோவிலோடு இணைந்தது. அதன் பிறகுதான் சாதிய சமூகமாக மாறியது. 1100 ஆண்டுகளுக்கு மேலாக பின்பற்றி வந்த சாதிய பாகுபாடுகளை ஒரு நாளில், சட்டத்தால் மட்டுமே, நிர்வாகத்தால் மட்டுமே களைய முடியாது. மனம் மாற்றத்தின் மூலம் மட்டுமே சாதிய ஏற்றத்தாழ்வுகளை அகற்ற முடியும். மனிதர்களாக இருப்பதும். மனித மாண்பைக் காப்பதும்தான் தீர்வு.

குரலற்றவர்களுக்கான குரலாக, பாதுகாப்பற்றவர்களுக்குப் பாதுகாப்பாக, உரிமை கோருபவர்களுக்கு உரிமையைப் பெற்றுத்தரும் அமைப்பாக ஆணையம் செயல்பட வேண்டும் என்றால் அனைத்து SC ST மக்களும் தங்களுடைய சட்டபூர்வமான உரிமைகளுக்காக ஆணையத்தை அணுகினால்தான் சாத்தியம். ஆணையம் உங்களுக்கானது. அதை நீங்கள் பயன்படுத்தும்போது அந்த அமைப்பு உயிர் பெறும், முழுமை பெறும்.

(தொடர்புக்கு: தமிழ்நாடு ஆதி திராவிடர் (ம) பழங்குடியினர் மாநில ஆணையம், எண் 725, இரண்டாவது மாடி, எல்.எல்.ஏ. பில்டிங், அண்ணா சாலை, சென்னை 600 002. email: tnscstcommission@gmail.com)